★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரீஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரீஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டு சோலை
70, 71A, சிறப்பு அங்காடி நவீன சந்தை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு
RASI
ராசி சில்க்ஸ்

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 09 வெள்ளிக்கிழமை (23 - 06 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 208

# தப்பியோடிய படையினர் மீண்டும் ராணுவத்தில் இணைய பின்னடிப்பு!

## கால எல்லை 26 வரை நீடிப்பு

கொழும்பு, ஜூன் 23

கடந்த காலங்களில் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களையும்—

இராணுவத்திலிருந்து ஒய்வுபெற்றுச் சென்றவர்களையும் — மீண்டும் இராணுவத்தில் வந்து சேர்ந்துகொள்ளும்படி அரசு விடுத்த அறிவிப்பு போதிய பலன் தரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இராணுவத்தில் மீண்டும் வந்து சேருவதற்கு இவர்கள் பின்னடிக்கின்றனர்.

கடந்த காலங்களில் இராணுவத்திலிருந்து சொல்லிக்கொள்ளாமல் தப்பிச் சென்றவர்களின் எண்ணிக்கை மட்டும் 26 ஆயிரம் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதே போன்று ஒய்வு பெற்றுச் சென்றவர்களும் ஆயிரக்கணக்கானோர்.

ஒய்வு பெற்றவர்களில் கடந்த 15 வருட காலத்தில் இராணுவத்திலிருந்து ஒய்வு பெற்றவர்களுக்கே இராணுவத்தில் மீண்டும் வந்து சேருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது

இப்படியானவர்கள் மீண்டும் வந்து இராணுவத்தில் சேருவதற்கு கடந்த 20 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் இது போதிய பலன் அளிக்கத் தவறியதை அடுத்து இந்த கால எல்லை இம் மாதம் 26 ஆம் திகதிக்கு நீடிக்கப்பட்டிருப்பதாக ராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க நேற்றுத் தெரிவித்துள்ளார்.

தற்போது இராணுவத்தில் நிலவும் ஆட்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களையும் —

15 வருட காலத்தில் ஒய்வு பெற்றவர்களையும் மீண்டும் சேவையில் சேர்த்து, அவர்களுக்கு குறுகியகால பயிற்சி அளித்து, அவர்களை மீண்டும் யுத்தத்தில் ஈடுபடுத்த அரசு

(4ஆம் பக்கம் பார்க்க)

## பண்டத்தரிப்பில் படையினர் சூடு; ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

பண்டத்தரிப்புப் பகுதிக்கு பனம் மட்டை வெட்டி வருவதற்காகச் சென்றவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வயிற்றில் படுகாயமடைந்தார்.

நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பிரான்பற்றைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி செல்வத்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடிக்கு மேலதிக துருப்பினர்

கொழும்பு, ஜூன் 23

காத்தான்குடியில் மேலதிக துருப்பினரும், ஊர்காவல் படையினரும், பொலீஸாரும் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்று பிரிகேடியர் சரத்முனசிங்க தெரிவித்தார்.

முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். இதற்கிடையில் காத்தான்குடியில் இருந்து முஸ்லிம்கள் வெளியேறுவதான செய்தியில் உண்மை எதுவும் இல்லை என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

காத்தான்குடிப் பகுதியில் இருந்து முஸ்லிம்களை வெளியேறுமாறு விடுதலைப் புலிகள் கடிதங்கள் மூலம் கேட்டதான செய்தியை விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் அண்மையில் மறுத்து அறிக்கை விட்டது தெரிந்ததே (இ-3)

## மேலும் 4 சடலங்கள் கண்டுபிடிப்பு:

## மர்மச் சடலங்கள் பற்றிய விசாரணை தொடர்கிறது

மொறட்டுவ கடலிக் சங்கமிக்கும் பொல்கொட ஆற்றில் மிதந்து கொண்டிருக்கையில் கண்டெடுக்கப்பட்ட 8 சடலங்கள் குறித்து தொடர்ந்து விசரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகபொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா நேற்று தெரிவித்தார்.

கண்டெடுக்கப்பட்ட 8 சடலங்களும் ஆண்களுடையவை என்றும், மிகவும் மோசமாக அவை சிதைந்து காணப்பட்டதால் அடையாளம் காண்பது சிரமமாக இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள விவரங்களின்படி, இவர்கள் மரணத்துக்கு முன்னர் தாக்கப்பட்டுள்ளனர் என்றும், ஒருவரின் சடலத்தில் பச்சை குத்தப்பட்ட அடையாளத்தில் இருந்து அவர் தமிழராக இருக்கலாம் என்றும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை, பொல்கொட ஆற்றில் மேலும் 4சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. (ஒ-3-14)

## ஈழ அகதிகளுக்கு எதிராக செயற்பட்ட முன்னாள் அமைச்சருக்கு தண்டனை

### டென்மார்க் நீதிமன்றம் தீர்ப்பு

கோபன்ஹேகன் ஜூன் 23

டென்மார்க் தமிழ் அகதிகள் சம்பந்தப்பட்ட சர்ச்சைக்குரிய வழக்கு ஒன்றில் நாட்டின் குடிவரவு விதிகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் டென்மார்க்கின் முன்னாள் நீதியமைச்சர் எரிக் ஹன்சனுக்கு ஒத்தி வைக்கப்பட்ட நான்கு மாதச் சிறைத் தண்டனை நேற்று வழங்கப்பட்டது.

டென்மார்க் அகதிகள் சட்டத்துக்கு அமைய இலங்கை தமிழ் அகதிகள் தமது குடும்பத்தினரை டென்மார்க்குக்கு அழைத்து ஒன்று சேர நீதியமைச்சர் மறுத்தார் என குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

15 மாதங்களாக நடை

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகாவுடன் நேற்று

## இடைக்கால நிர்வாகசபை குறித்து வடக்கு - கிழக்கு எம். பிக்கள் பேச்சு

கொழும்பு, ஜூன் 23

வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து நடத்திய பேச்சுகளின் போது இடைக்கால நிர்வாக சபை அமைப்பது குறித்து முடிவு எடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தப்படுவது குறித்து நேற்றைய பேச்சுகளின் போது விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இடைக்கால நிர்வாக சபை எவ்வகையில் அமைக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் அதன் வியூகம் பற்றியும் ஜனாதிபதி. அமைச்சர்கள், ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோர் இணைந்து வரைவு

(3 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் உற்சவ காலத்தில் தாக்குதல்களை தவிர்க்குக!

### பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை

எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் யாழ். மாநகர சபைப்பகுதியில் இராணுவத் தாக்குதல்களைத் தவிர்க்குமாறு கோரி பாதுகாப்பு அமைச்சுக்கு தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வருடந்தோறும் நல்லூர் உற்சவ காலம் குறித்து பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் இவ்வருடமும் முன்கூட்டியே இதற்கான தகவல் நேற்று பாதுகாப்பு அமைச்சுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினூடாக யாழ். மாநகர சபையால் அனுப்பி வைக்கப்பட்டது.

நல்லூர் உற்சவ காலத்தில் மாநகர சபை பகுதி வீதிகளில் சன நடமாட்டம் அதிகமாகக் காணப்படுமென்பதால் அப்போது தாக்குதல் ஏதும் மேற்கொண்டால் உயிரிழப்புகள் அதிகம் ஏற்படும் என்று மாநகர சபையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்த தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ-4)

## மட்டக்களப்பு காட்டுப் பகுதியில் படையினர் தேடுதல் நடவடிக்கை

மட்டக்களப்பின் காட்டுப் பகுதிகளில் ஸ்ரீலங்கா படையினர் பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

பெண்டுகல்சேனை, தரவை, கூழாவடி ஆகிய பகுதிகளில் உள்ள காடுகளில் இந்த தேடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கென கவச வாகனங்கள் சகிதம் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் காட்டுப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

தனியார் உழவு இயந்திரங்கள், வாகனங்கள் இந்த நடவடிக்கைக்காக பெறப்பட்டுள்ளன.

புலிபாய்ந்தகல் இராணுவ முகாமில் இருந்தே இராணுவ நடவடிக்கைக்கான பிரதான விநியோகங்கள் வழங்கப்படுகின்றன.

இதேவேளை — சந்திவெளிப் பகுதி தமிழ் மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

அக்கரைப்பற்று காட்டுப் பகுதியில் மேலதிக படையினர் குவிக்கப்பட்டு இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

கடந்த சில தினங்களாக தேடுதல் நடவடிக்கை தொடர்கிறது. வெளியிடங்களில் இருந்து நாளாந்தம் படையினர் குவிக்கப்படுகின்றனர். [இ-3]

## படையினர் சோதனை

மன்னார் தீவின் காட்டுப் பகுதிகளிலும் படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் போது கைதான அப்பாவி தமிழர்கள் முகாம்களுக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளனர். [இ-3]

## தெல்லிப்பளை பகுதியில் ராணுவத்திடம் சிக்கிய மூவர்

### விசாரணையின் பின் விடுதலை

தெல்லிப்பளை காசிப்பிள்ளையார் கோயிலில் கடந்த செவ்வாய்க்கிழமை கற்பூரம் கொளுத்திக் கும்பிட்டுக் கொண்டிருந்தவரை அப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் பிடித்துச்சென்று பின்னர் விடுதலை செய்துள்ளனர்.

தெல்லிப்பளையைச்சேர்ந்த சிவராஜா என்பவர் அன்றைய தினம் காலை 9மணிக்கு காசிப்பிள்ளையார் கோயிலின் வாசலில் வீதியோரத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு கற்பூரம் கொளுத்தி கும்பிட்டுக் கொண்டிருந்தபோது —

அப்பகுதிக்கு வந்த 20பேர் கொண்ட இராணுவக் குழுவொன்று அவரை பின்பக்கத்தால் வந்து பிடித்தனராம்.

இவரை பிடித்துக் கொண்டு செல்லும் வழியில் சிவல் தொழிலாளி ஒருவரும் வழியில் அகப்பட்டதாகவும், பின்னர் இப்பகுதியிலுள்ள இம்பிலிட்டி வைரவர் கோயிலில் பொங்கல் செய்வதற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்த ஒரு பெண்ணும் பிடிபட்டார்.

மூவரையும் இராணுவத்தினர் தெல்லிப்பளை ஆனைக்குட்டி மதவடிப் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு அழைத்துச் சென்றனர் என்றும் —

அங்கு அவர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் 2 மணிநேரம் கழித்து அந்த மூவரையும் படையினர் விடுதலை செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-4)

## தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர் விவகாரம் குறித்து அறிக்கை சமர்ப்பிப்பு

### செய்ய வேண்டிய வசதிகள் குறித்து ஆலோசனை

யாழ்ப்பாணம். ஜூன் 23

வட இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரியின் 37 மாணவர்களையும் யாழ். பல்கலைக்கழகத்தில் அனுமதித்து அவர்கள் கல்விபெற வசதி செய்வது குறித்த அறிக்கை ஒன்று துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வைத்திய கலாநிதி எஸ். ஆனந்தராஜா தலைமையில் நியமிக்கப்பட்ட ஒன்பது அங்கத்தவர் குழு சமர்ப்பித்துள்ள இந்த அறிக்கையில்—

தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்குச் செய்யப்பட வேண்டிய வசதிகள் குறித்து சில ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக— அறியவந்துள்ளது.

வட இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரியின் 37 மாணவர்களை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் சேர்த்து கல்வி தொடர பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு அனுமதி வழங்கியிருந்ததும்—

இந்த விவகாரம் குறித்து யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்தியதும் —

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அரசின் மொழிக் கொள்கை குறித்து நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 23

புதிய அரசமைப்பின் திருத்தத்தின் கீழ் அரசின் மொழிக் கொள்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் இலங்கையில் உத்தியோகபூர்வமொழிகளாக இருக்கும். இந்த இரண்டு மொழிகளுடன் ஆங்கிலம் நாட்டின் தேசிய மொழியாகக் கருதப்படும்.

இலங்கை முழுவதும் தமிழ் — சிங்களம் ஆகிய இரு மொழிகளும் நிர்வாக மொழிகளாகவும் இருந்துவரும்.

வடக்கு, கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய சகல மாகாணங்களிலும் அரச நிறுவனங்கள், மாகாணசபைகள் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியன பொது பதிவேடுகளை பேணுவதற்கு சிங்கள மொழி பயன்படுத்தப்படும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இந்த இடத்துக்கு தமிழ் மொழி பயன்படுத்தப்படும்

சகல சட்டங்களும், உபவிதிகளும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும்இயற்றப்படும்.

சிங்களமும், தமிழும் இலங்கை முழுவதிலும் நீதிமன்ற மொழியாக இருக்கும்.

வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நீதிமன்றங்களில் பதிவேடுகளையும்,

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டுநகர் தமிழர் இருவர் பொலன்னறுவையில் கைது

மட்டக்களப்பைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்கள் கடந்த 13 ஆம் திகதி பொலன்னறுவை ரயில் நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் இது வரை விடுதலை செய்யப்படவில்லை.

லக்சுமணன் கிருஷ்ணகுமார் (18 வயது), கந்தசாமி திரவிய குமார் (20 வயது) ஆகியோரே கைதானவர்கள் ஆவர். (இ-3)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரிப் பகுதியை பாதுகாப்பு வலயமாக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 23

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை உள்ள பகுதியை பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

யாழ். போதனா வைத்தியசாலைப் பகுதியை பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது போன்று கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலைப் பகுதியையும் பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்வது குறித்து... நடைபெற்று வருகின்றன.

பாதுகாப்பு வலயத்தை கண்காணிக்கும் பொறுப்பை பிரான்ஸ் அமைப்பான எம். எஸ். எவ். இடம் ஒப்படைப்பது குறித்தும் பேச்சுக்கள் நடைபெறுகின்றன.

கிளிநொச்சி அரச அதிபர் ... தில்லைநடராஜா இது தொடர்பான பேச்சுக்களை முன் எடுத்துள்ளார். (ஒ-8)

## காலியில் குண்டு வெடிப்பு நால்வர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 23

காலியில் நேற்று நடந்த குண்டு வெடிப்பு ஒன்றில் 4 பேர் காயமடைந்தனர்.

குண்டு வெடிப்பால் கட்டடங்கள் பல சேதமடைந்துள்ளன.

குண்டு வெடிப்பின் தாக்கம் காலி நகரில் இருந்து இரண்டரை மைல் தூரம் வரை காணப்பட்டதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன பன்றிகளும், பன்றிக் குட்டிகளும் விற்பனைக்குண்டு. அண்ணாபாம் இணுவில். [சி-1528]

## தேவை

பாவனைக்கு உட்படுத்தக் கூடிய குளிர்சாதனப் பெட்டிகள் [ப்..பிறிட்ஜ்] தேவைப்படுகின்றது. விற்பனை செய்ய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்: வானவில் குளிர்பான நிலையம், ஆனைக்குளம் சந்தி, யாழ்ப்பாணம். [சி-1525]

## SPECIAL ANTENNA

To view Rupavahini, Madras, Programmes Fixing Special T.V. Antenna, Repairing Antennas, Radios-T. V. Decks, Clocks and Watches. Venus Dilka Watch and Radio Works, 284, Stanley Road (Ariyakulam Junction), Jaffna. Branch: Kandy Road, Chavakachcheri. (C-1490)

## விற்பனையாளர் தேவை

றோஸ் பிறாண்ட் இனிப்புத் தொழிற்சாலையின் உற்பத்திப் பொருள்கள் சந்தைப் படுத்துவதற்காக, தகுதி வாய்ந்த விற்பனையாளரிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: துரித சந்தைப்படுத்தல் சேவை, 66, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [சி-1526]

## மணமகன் தேவை

வயது 31, நட்சத்திரம் மகம், செவ்வாய்க்குற்றமற்ற ஆசிரியைக்கு அரச பதவி வகிக்கும் மணமகன் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 805, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [37176]

## புலமைப் பரிசில்

ஆண்டு - 5 புலமைப்பரிசில் தேர்வுக்கான வினாப்பத்திரம் 1, வினாப்பத்திரம் 2க்குரிய பொதுவிவேகம், பொதறிவு வெளிவந்து விட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். [37173]

## தவறிவிட்டது

கோண்டாவில் நிரு கல்வி நிலையத்திற்கும், இணுவில் துரை வீதிக்கும் இடையில் தங்கச்சங்கிலி ஒன்று 19-6-95 மாலை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் "யோகா கலையகம்" சுன்னாகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [8443]

கொடிகாமம் கச்சாய் பேதுருவானவர் ஆலயத்திற்கும், சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் இடையில் தங்கச் சங்கிலி 17-6-95இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து செல்வராஜன், கௌரி ஸ்ரோர்ஸ், கொடிகாமம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [37187]

# அன்பான வேண்டுகோள்

## திருமிகு இ. ஜெயராஜா

அவர்களே!

20 - 06 - 1995 உதயன் பத்திரிகையில் வெளிவந்த தங்களது கருத்தினை அறிந்து அதிர்ச்சியுற்றேன். கருத்து வேறுபாடுகள் உண்மையை நமக்கு உணர்த்துவதற்கு உதவும்.

இதிகாசங்கள், இலக்கியங்கள் தோன்றியது மக்களுக்கு நல்லறிவு புகட்டவும் நல்வழிப்படுத்தவுமே, எனவே, இந்த இக்கட்டான காலகட்டத்தில் தங்கள் பணி மேன் மேலும் தொடர்ந்து மக்களை நன்னெறிப் படுத்த உதவுமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புள்ள

வண. பிதா க. அ. பிரான்சிஸ் யோசவ்

(சி/1542)



யாழ். வண் கிழக்குக் கலட்டியம்பதி

## அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய

# மகோற்சவ விஞ்ஞாபனம்

கொடியேற்றம் இன்று வெள்ளி காலை 10-00மணி **23-06-95**

வேட்டைத்திருவிழா மாலை 4-00மணி **30-06-95**

பூந்தண்டிகை இரவு 7-00மணி **30 06-95**

சப்பரம் இரவு 7-00மணி **02-07-95**

இரதோற்சவம் காலை 7-00மணி **03-07-95**

தீர்த்தம் காலை 9-30மணி **04-07-95**

கொடி இறக்கம் மாலை 5-30மணி **04-07-95**

கிராமப்பிரதக்ஷணம் மாலை 5-00மணி **05-07-95**

வைரவர் சாந்தி மாலை 7-00மணி **07-07-95**

பிரமமோற்சவ பிரதமகுரு

சிவஸ்ரீ துரை விவேகானந்தாக் குருக்கள்

இங்ஙனம்

ஆலய பிரதம குருவும், ஆதீனகர்த்தாவுமான

சிவஸ்ரீ துரை விவேகானந்தாக்குருக்கள்,

(37170)

# திரு. பிரணவநாதன்

யாழ். நகரில் இவர் புதிய அறிமுகம்;

ஆனால்

இவரே இனி விஞ்ஞானத்தில் நிரந்தரம்!

## ஆண்டு 11

✶ விஞ்ஞானம் மீட்டல் வகுப்பு ✶

ஆசிரியர்:

திரு. பிரணவநாதன்

ஆரம்பம்: **24 - 06 - 1995**

பிற்பகல் 2 மணி

## யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

- ✶ முழுப்பாடத் திட்டமும் மீட்டல் செய்யப்படும்
- ✶ அனுமதிகளை முன்கூட்டியே பெற்று கொள்ளவும்.

[சி-1538]

# விமான தொடர்பு சேவை

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பிற்கு விமான தொடர் அம்பியூலன்ஸ் இணைப்பு சேவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பயணப் பதிவு செய்யும் நேரம்:

காலை 9.00 முதல் மாலை 5.00 வரை

குறிப்பு

நோயாளர்களுக்கும், வயோதிபர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்

வாரத்தில் திங்கள், வியாழன் சேவை நடைபெறும்

தொடர்பு:

**தர்மிசா ரவல்ஸ்**

குமரன் பயணிகள் விடுதி

அறை இல. 6

67, அருச்சுனா வீதி [ஸ்ரான்லி றோட்],

யாழ்ப்பாணம்.

(சி/1545)

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுக் கழகம்

வழங்கும்

## கவிஞர் தேவதாசனின்

# எல்லாளன்

(வரலாற்றுக் கற்பனை நாடகம்)

இடம்: கைலாசபதி கலையரங்கம், யாழ். பல்கலைக்கழகம்.

காலம்: 24 - 06 - 1995 சனிக்கிழமை

காலை 9-30 மாலை 3-30

பிரவேசம்: 50 ரூபா, 20 ரூபா, 10 ரூபா

✶ நுழைவுச் சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

– வரலாற்றுக் கழகம்.

விளம்பர அன்பளிப்பு:

## லலிதா பட்டுச் சோலை

5, 6 சிறப்பு அங்காடி, யாழ்ப்பாணம்,

(37180)

# நினைவஞ்சலி



திருமதி

## நகுலாம்பிகை சதாசிவம்

தோற்றம்: 23 – 06 – 1918

மறைவு: 24 – 12 – 1994

அம்மையப்பனுடன் இரண்டறக் கலந்து ஆறு திங்கள் அகன்றிடினும் என்றும் உங்களைப் பாசத்துடன் நினைவு கூரும்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல: 129, மூன்றாம் குறுக்குதெரு, யாழ்ப்பாணம். (37175)

# TENTH YEAR OF REMEMBRANCE



A Service of Remembrance and Thanksgiving for the Life, Work and Witness of Late

**Mr. C. E. ANANDARAJAN**

(Former Principal, St. John's College)

will be held at St. John's Church, Chundikuli on Monday 26th June at 4-30 p.m.

All are cordially invited.

Rev. G. D. Anandarajan.

(8598)

வெளிவந்துவிட்டது!

வித்துவான்

பொன். முத்துக்குமாரன் பி. ஓ. எல்.

எழுதிய

# தமிழ் மரபு

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசுத் தேர்வு எழுதுவோருக்கும், உயர் வகுப்பு மாணவருக்கும், தமிழ் மொழியைப் பிழையின்றி எழுத விரும்புவோருக்கும் அருமையான ஒரு கைந்நூல்.

விலை ரூபா: **60/-**

பிரபல புத்தகசாலைகளில் பெறுக.

தொகையாகப் பெற:

ஆனந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

[சி-1709]

விஸ்வப் பிரம்மணேய நம

புங்குடுதீவு பிட்டியம்பதி

ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய

## வருடாந்த மகோற்சவ தினம்

கொடியேற்றம் — 25-06-95 ஞாயிற்றுக்கிழமை

தேர்த் திருவிழா — 03-07-95 திங்கட்கிழமை

தீர்த்தத் திருவிழா — 04-07-95 செவ்வாய்க்கிழமை

அன்று யாழ்ப்பாணம் கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலயத்தில் விசேட அபிஷேகம் நடைபெறும். அடியார்கள் அனைவரும் அபிஷேகத்தில் கலந்து அம்பிகையின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

குறிப்பு!

25 – 06 – 95 ஞாயிற்றுக்கிழமை மகாசபை பொதுக்கூட்டம் ஆஸ்பத்திரி முன்பாக உள்ள பழைய மாவடி மரக்காலையில் காலை 9-00 மணியளவில் நடைபெற உள்ளது. மகாசபையினர் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

நன்றி!

இங்ஙனம்;

[37182] ஆலயபரிபாலன சபை.

இலங்கை

## பட்டயக் கணக்காளர் நிறுவன

# மாணவர்களுக்கு


இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவன மாணவர்களாகத் தம்மைப் பதிவு செய்வோர் எமது நிறுவனத்தின் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளலாம். க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 2 திறமைச்சித்திகள் பெற்றோர் பதிவு செய்யலாம். ஜனவரி மாதம் 1996 இல் நடைபெறவிருக்கும் தகுதிச்சான்றுப் பரீட்சைக்கு (Licentiate - I) தோற்றும் மாணவர்கள் 01 – 07 – 1995 இற்கு முன்னர் தம்மைப் பதிவு செய்திருக்க வேண்டும். இதற்கான விரிவுரைகள் T. R. R. O நிறுவனத்தின் ஆதரவுடன் இலவசமாக நடத்தப்படும்.

தொடர்பு:-

இல:- 140, பலாலி வீதி, திருநெல்வேலி.

(37189)

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

## அரியரத்தினம் சிவேந்திரன்

(உரிமையாளர் - அரியரத்தினம் ஸ்ரோர்ஸ், மாத்தறை)

மலர்வு: 06 – 02 – 1939

உதிர்வு: 03 – 07 – 1994

திதி: 23 – 06 – 1995

பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் எங்கள் வாழ்வின் ஒளி விளக்காய் எமையெல்லாம் வாழ வைத்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்,

— குடும்பத்தினர்

மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு, இணுவில்.

(37165)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## கதிர்காமருக்கு படுதோல்வி!

தமது அரசாங்கம் நடத்தும் போருக்கு ஆதரவு திரட்டுவதற்காகவும், ராணுவ உதவிகளைத் தருமாறு இரப்பதற்காகவும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இரண்டு வாரங்களுக்கு மேலாக மேற்கு நாடுகளில் அலையாய் அலைந்துவிட்டு வந்திருக்கிறார். பல நாடுகள் போருக்கு ஆதரவு தெரிவித்ததாகவும், சில நாடுகள் ஆயுத உதவி வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் கதிர்காமர் வெளுத்துவாங்கியிருக்கிறார்!

விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக, மேற்கு நாடுகளைக் கொண்டு விடுதலைப் புலிகளை அந்நாடுகளில் தடை செய்வதும், அங்குள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகங்களை மூடச் செய்வதுமே கதிர்காமரின் இரண்டு வார விஜயத்தின் பிரதான நோக்கமாக இருந்தது.

ஆனால் அது விடயத்தில் பெரும் தோல்வியையே தோளில் சுமந்து கொண்டு கவலை தோய்ந்த முகத்துடன் நாடு திரும்பியுள்ளார்! விடுதலைப்புலிகளைத் தடை செய்யவேண்டும்; அவர்களின் அலுவலகங்களை மூடிவிட வேண்டும்; என்ற இவரின் கோரிக்கைகளை முகத்தில் அறைவதுபோல - விளக்கு மாற்றால் அடிப்பது போல ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதிகள் நிராகரித்து விட்டனர்.

போன மச்சான் திரும்பிவந்தார் கோவணத்தோடே என்ற நிலையில் இங்கு வந்துள்ள கதிர்காமர், சந்திரிகாவின் விசுவாசச் சேவகன் என்ற முறையில் தாம் எடுத்துக் கூறிய நியாயங்களை புதன்கிழமை நடத்திய செய்தியாளர் மாநாட்டில் எடுத்துரைத்திருக்கிறார்.

இவர் கூறிய எந்த நியாயங்களையும் அவர்கள் ஏற்றுக்கொண்டதாக இல்லை. எதிர்வாதங்களைப் போட்டு மேற்கு நாட்டுப்பிரதிநிதிகள் கதிர்காமரை பிய்த்துப்பிடுங்கி இருக்கிறார்கள்!

உங்கள் நாட்டில் விடுதலைப் புலிகளைத் தடை செய்யாமல் அவர்களைத் தடை செய்யுமாறு எங்களை எப்படிக் கேட்க முடியும்? எங்கள் நாடுகளின் சட்டப்படி அவர்கள் குற்றம் எதுவும் செய்யாதவரை நாம் அவர்களின் செயற்பாடுகளைத் தடை செய்ய முடியாது என்று ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் கதிர்காமருக்கு தலையடி போட்டுவிட்டார்கள்!

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள், விடுதலைப் புலிகளுக்கு பணம் வழங்குகிறார்கள். அந்தப் பணத்தைக் கொண்டே புலிகள் ஆயுதங்களை வாங்குகிறார்கள். அதனைக் கண்டு ஸ்ரீலங்கா அரசுக்கு வயிறு எரிகிறது. ஆயுத கொள்வனவுக்குச் சேரும் பணத்தை வெளிநாட்டு அரசுகள் மூலம் தடுத்து விட்டால் புலிகளைப் பலவீனப் படுத்தி விடலாம்.

இத்தகைய சிந்தனையுடனேயே விடுதலைப் புலிகளை வெளிநாடுகளில் தடை செய்விக்க ஸ்ரீலங்கா அரசு முயல்கிறது. அந்த நோக்கத்தை அடைய ஒரு தமிழரையே அரசு பயன்படுத்துகிறது!

பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, சுவீடன், நெதர்லாந்து, இத்தாலி, பெல்ஜியம், டென்மார்க், ஸ்பெயின், போர்த்துக்கல், கிரீஸ், அயர்லாந்து, பின்லாந்து, லக்ஸம்பேர்க், ஆஸ்திரியா ஆகிய பதினாறு மேற்கு நாடுகள் ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கின்றன.

அதனால்தான், ஐரோப்பிய யூனியனின் தலைமையகம் அமைந்துள்ள லக்ஸம்பேர்க்கில் கதிர்காமர் நீண்ட நாள்கள் வினைக்கெட்டார். ஆனால் அவரது முயற்சி தோல்வி கண்டுவிட்டது. எனினும் அந்தத் தோல்வியை மறைத்து —

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகப் பலவீனப் படுத்தி பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதற்கு மேற்கு நாடுகள் ஆதரவு வழங்கி இருப்பதாக விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்று தன்னைத் தானே தட்டிக் கொள்கிறார்!

## புலிகளின் குரல் வானொலியில்

23 - 06 - 1995
வெள்ளி இரவு

- ★ 8-02 — கலைமஞ்சரி — அறிமுகம் கலை பண்பாட்டுக்கழக ஆதரவுடன் நிதர்சனம் தயாரித்து வழங்கிய "முகங்கள்" வீடியோ படம், சிறுகதை — சி. கண்ணம்மா எழுதிய "ஒட்டுண்ணிகள்" கவிதை — இ. செல்வரட்ணம் எழுதிய "என் நாடு வளம் கொழிக்கும் பொன் நாடு"
- ★ 8-25 — கணப்பொழுது
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — அரசியல் அரங்கம்
- ★ 8-50 — ஏர்முனை "இழங்கினங்கள்" குறுநாடகம்

24 — 06 — 1995
சனி காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் அதனைத் தொடர்ந்து
- ★ 8-00 — மணிவரை நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

வெள்ளி மாலை

- ★ 5-01 — சிந்தனைச்சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — கணநேரக் காவியங்கள்
- ★ 5-30 — மண்ணின்குரல்
- ★ 5 40 — நேயர் கடிதங்கள்
- ★ 5-45 — வெற்றிச் சுவடுகள்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — நாடகம் "பொம்பிளை பார்க்கப் போறம்" அங்கம்-07
- ★ 6-10 — விளையாட்டுச் செய்திகள் அதனைத் தொடர்ந்து என் தெரிவு

## மீண்டும் பதுங்குகுழிகள்

அளவெட்டி, ஜூன் 23
அளவெட்டிப் பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்புப் பதுங்கு குழிகளை அமைத்து வருகின்றனர். வீடுகளிலும் பொது இடங்களிலும் பிரதான வீதி ஓரங்களிலும் பதுங்கு குழிகள் அமைக்கப்படுகின்றன. (க-13)

# தீவுப் பகுதிகளில் தீவிர பாதுகாப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 2
தீவுப்பகுதிகளில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் தம்மை போருக்குத் தயார்ப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

மண்டைதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் பகுதி கரையோரங்களில் புதிதாக காவலரண்களை படையினர் அமைத்து வருகின்றனர்.

ஏற்கனவே அமைந்திருந்த காவலரண்கள் நன்கு பலப் படுத்தப்பட்டு மேலதிக படையினர் அங்கு நிறுத்தப்பட்டு வருகின்றனர்.

தீவுப் பகுதிகளில் உள்ள பிரதான முகாம்களில் துருப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் —

வேலணை சந்திக்கு அண்மையில் உள்ள பிரதான படைத்தளத்தில் துருப்பினர் போர் பயிற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் செய்தி ஒன்று தெரிவித்தது.

காரைநகர் கடற்படைத் தளத்தின் பாதுகாப்புப் பலப் படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## விமானத்தை கடத்தியவர் கைதானார்

டோக்கியோ, ஜூன் 23
ஜப்பானில் இடம்பெற்ற விமானக் கடத்தல் சம்பவத்தை பொலீஸார் முறியடித்துள்ளனர்.

நேற்று அதிகாலை விமானத்துக்குள் திடீரெனப் புகுந்த பொலீஸார் கடத்தல்காரரை கைதுசெய்து 350 பயணிகளையும் பாதுகாப்பாக மீட்டனர்.

"அவும் ஷின்ரி கியோ" மத அமைப்பைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் இந்த நபர் ஒரு "ஸ்குறூ ட்ரைவரை" பயன்படுத்தி மிரட்டியே விமானத்தை கடத்தியுள்ளார் என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-17)

## விளையாட்டு கழகங்களின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 23
யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு விளையாட்டுக் கழகங்களுக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு உறுப்பினர்களையும், விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்கள் ஆகியோரையும் இதிற்கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# போரைத் தொடரும் விதம் குறித்து படையினரிடையே கருத்து பேதம்

கொழும்பு, ஜூன் 23
விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே நடைபெற்று வரும் யுத்தத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக படை அதிகாரிகள் மத்தியில் மூன்று விதமான கருத்துக்கள் நிலவுவதாக "யுக்திய" பத்திரிகை தெரிவித்துள்ளது.

தற்போது விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்களை கிழக்கிலேயே தீவிரப்படுத்தி உள்ளனர். எனவே முதலில் கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலமடங்கு அதிகரிக்க வேண்டும் என்பது அவர்களில் ஒரு சாராரின் கருத்தாகும்.

படையினரின் கவனத்தை கிழக்கு மாகாணத்துக்கு திசை திருப்பி வடக்கில் தமது பலத்தை வளர்க்கவே கிழக்கில் தமது தாக்குதல்களை அவர்கள் தீவிரப்படுத்தி உள்ளனர். கிழக்கில் புலிகள் நடத்தும் தாக்குதல்கள் பிரதானமானவையாக கொள்ளத்தக்கவை அல்ல. எனவே வடக்கில் கேந்திரப் பகுதிகளில் உடனடியாகத் தாக்குதலை ஆரம்பிக்க வேண்டும் என்பது படையினரில் மற்றொரு சாராரின் கருத்தாகும்.

கிழக்கில் தற்போது மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளை இப்படியே பேணிக்கொண்டு சமகாலத்தில் குடாநாட்டின் உட்பிரதேசங்களில் தாக்குதல்களை ஆரம்பிக்க வேண்டும் என்பது மூன்றாவது தரப்பினரின் கருத்தாகும்.

— இவ்வாறு 'யுக்திய' பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-10)

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், ஜூன் 23
திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஐ-111)

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய ஏகாதசித் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் நடைபெறும். [க-161]

★ ★ ★

கொக்குவில் மாத்தனை கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

அடுத்த மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். [ஐ-14]

★ ★ ★

சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

★ ★ ★

கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் சிறப்பு மலர் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12-30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். [ஐ-14]

★ ★ ★

சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். அடுத்த மாதம் 3 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். [ஐ-28]

★ ★ ★

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஞானவீரபத்திரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டி கடந்த செவ்வாய்க்கிழமை முதல் பெரிய புராணம் தொடர் விரிவுரை நடைபெற்று வருகின்றது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை பிரம்மஸ்ரீ சபாரத்தின ஈஸ்வர சர்மாவும் —

தொடர்ந்து 28 ஆம் திகதி வரை திரு. த. சிவகுமாரனும் பேருரை வழங்குவர். [ஐ-14]

★ ★ ★

சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. ஜூலை 3 ஆம் திகதி இரதோற்சவமும், 4 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (க-175)

★ ★ ★

வட்டுக்கோட்டை விசாலாட்சி சமேத காசி விசுவநாத சிவன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. ஜூலை 3 ஆம் திகதி இரதோற்சவமும், 5 ஆம் திகதி புதன் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (க-175)

## ஊர்காவற் படைகளை தோட்டங்களில் நிறுவுக

### தொழிற்சங்கங்கள் கோரிக்கை

கொழும்பு, ஜூன். 23
தோட்டத் தொழிலாளர்களைப் பாதுகாக்க தோட்டங்கள் தோறும் ஊர்காவற் படை அமைக்க வேண்டும் என்றுபல தொழிற் சங்கங்கள் அரசிடம் கோரியுள்ளன.

களுத்துறை கிக்கியானத் தோட்டத் தொழிலாளியான நல்லசிவம் என்பவர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதைக் கண்டித்துள்ள இத்தொழிற்சங்கங்கள் இக்கோரிக்கையை விடுத்துள்ளன.

அரசில் அங்கம் வகிக்கும் இ. தொ. கா. உட்பட பல தொழிற் சங்கங்கள் இக் கோரிக்கையை விடுத்துள்ளன. [அ-3]

## அந்தக் குழுவுடன் எமக்கு எந்தத் தொடர்பும் இல்லை

### யாழ், பல்கலை, ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 23
"மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக போதனாசிரியர்கள் சங்கம் யாழ்ப்பாணம்" என்ற ஒரு குழு யாழ், பல்கலைக்கழகத்தில் இயங்கவில்லை என்றும் —

அவ்வாறு அழைக்கப்படும் குழுவுக்கும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உறுப்பினர் எவருக்கும் தொடர்பில்லை என்றும் —

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது -

கொழும்புப்பத்திரிகைகளில் வெளிவந்த சில அறிக்கைகளைப் பற்றி அறிந்தோம். இந்த அறிக்கைகள் லண்டன் பி. பி. சி. பிலிப்பீன்ஸ், வெரித்தாஸ் வானொலிகளிலும் ஒலிபரப்பப்பட்டுள்ளன. இவற்றை 'மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழகப் போதனாசிரியர்கள் சங்கம் யாழ்ப்பாணம்" என்று தம்மை அழைக்கும் ஒரு குழுவினர் வெளியிட்டுள்ளதாகக் கூறுவதால் நாம் பெரிதும் வியாகூலம் அடைந்துள்ளோம்.

"மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழகப் போதனாசிரியர்கள் சங்கம்— யாழ்ப்பாணம்" என்று அழைக்கப்படும் இந்தக் குழுவுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் எந்த உறுப்பினருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதனைக் கூற விரும்புகின்றோம். இந்தக் குழுவுக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதைக் கூறிக்கொள்ளும் அதே வேளையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளவுக்குள் இப்படி ஒரு குழு இருப்பதாக நாம் சற்றும் அறிந்திருக்கவில்லை என்பதையும் கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் மேற்குறிப்பிட்ட குழுவுடன் எந்தவித உறவும் வைத்திருக்கவில்லை எனவும் அவர்களுடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் தெளிவாகக் கூற விரும்புகிறோம் — என்று கூறப்பட்டுள்ளது. (அ-க)

## கணித - விஞ்ஞான மூலவள நிலைய இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 23
"உதயன்" பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவுடன் கோப்பாய் கணித, விஞ்ஞான மூலவள நிலையம் நடத்தும்கணித விஞ்ஞான வினாடி வினாப் போட்டியின் வலய மட்ட இறுதிச் சுற்றுப் போட்டி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறும்.

கடந்த 16ஆம் திகதி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் நடைபெற்ற வலய மட்ட முதலாம் சுற்றுப் போட்டியில் ஒவ்வோர் ஆண்டு பிரிவிலும் தெரிவுசெய்யப்பட்ட 10 மாணவர்கள் நாளைய இறுதிச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற உள்ளனர்.

இப்போட்டியில் ஒவ்வோர் ஆண்டிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும், இறுதிச் சுற்றில் கலந்துகொள்ளும் 60 பேருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

எதிர்வரும் முதலாம் திகதி கோப்பாய் கணித, விஞ்ஞான மூலவள நிலையத்தில் நடைபெறவுள்ள கணித, விஞ்ஞான தின விழாவில் வைத்து இவை மாணவர்களுக்கு வழங்கப்படும். (ஐ)

## இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 23
கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை தமிழ் மன்றத்தின் முத்தமிழ் விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு இரதிலக்குமி மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் கலந்து கொள்வார். (ஐ-14)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 23
யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் கலைவட்ட கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

"குழந்தை ம. சண்முகலிங்கத்தின் எழுத்துருக்கள்" என்னும் தலைப்பில் க. ரதிதரனும், "எனது நாடக அனுபவம்" எனும் தலைப்பில் குழந்தை ம. சண்முகலிங்கமும் கருத்துரை வழங்குவார்கள். [ஐ-14]

## கைவிடப்பட்ட நிலையில் "நரோமா" திருமலையில்

கொழும்பு, ஜூன் 23
பருத்தித்துறை மற்றும் தீவுப்பகுதிக்கான பயணிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த "நரோமா" கப்பல் திருமலை துறைமுகத்தில் தற்போது கைவிடப்பட்ட நிலையில் உள்ளது.

அந்தக் கப்பலில் பணியாற்றிய வெளிநாட்டு பணியாளர்கள் அனைவரும் தத்தமது நாடுகளுக்குத் திரும்பி விட்டனர் என்று திருமலை பொலீஸார் தெரிவித்தனர்.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட இக்கப்பல் சேவையில் ஈடுபடுத்த ஏற்றதாக இல்லை என்று ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

கப்பலை கைவிட்டு பணியாளர்கள் திரும்பியமைக்கு காரணம் தெரியவில்லை என்றும் பொலீஸார் தெரிவித்தனர். [ஐ-க-3-10]

## சந்திரிகாவின் மாமியாரின் மரணச் சடங்கிற்கு சென்ற செய்தியாளர் மீது தாக்குதல்

உண்மையில் காலமான விஜய குமாரணதுங்காவின் தாயாரின் மரணச்சடங்கு தொடர்பான செய்திகளைச் சேகரிக்கச் சென்ற 'திவயின' பத்திரிகையின் செய்தியாளர்கள் இருவர் அவரது இல்லத்தில் வைத்து தாக்கப்பட்டுள்ளனர்.

செய்தியாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இருலப்பனை பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தனியார் பாதுகாப்புச் சேவையைச் சேர்ந்தவர்கள் எனச் சொல்லப்படும் வெள்ளைநிற சீருடை அணிந்தவர்களே செய்தியாளர்களை மிக மோசமாகத் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## தியாகராசா ம.ம.வி மாணவர் சாதனை

கோட்ட மட்டத்தில் நடைபெற்ற தமிழ் மொழிக் கலைத்திறன் போட்டிகளில் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் பிரிவு - I அபிநயப் பாடல், பேச்சுப் போட்டி; பிரிவு-II கட்டுரைப் போட்டி, திருக்குறள் அறிவுப் போட்டி, பா ஓதல்; பிரிவு - III கட்டுரைப் போட்டி, சாஸ்திரிய இசை ஆகியவற்றில் முதல் இடங்களையும் —

மாவட்ட ரீதியில் நடைபெற்ற பிரிவு - II திருக்குறள் அறிவுப் போட்டியி முதல் இடத்தையும்—

வலய மட்டத்தில் நடைபெற்ற பிரிவு - II கட்டுரை, பா ஓதலில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

### பண்டத்தரிப்பில்—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
துரை (58 வயது) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

வயிற்றில் சன்னம் துளைத்துச் சென்ற நிலையில் இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-15)

### இடைக்கால...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்றை இன்னும் இரண்டு நாட்களில் சமர்ப்பிக்க உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியுடன் நடந்த பேச்சுக்களில் கலந்து கொண்டவர்களின் பெயர் விவரம் எதுவும் நேற்று வெளியாகவில்லை. [ஒ-6]

## ஆங்கிலதினவிழா

கைதடி ஏருத்திடல் அ. த. க. பாடசாலை ஆங்கில தின விழா இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு க. பூபாலபிள்ளை தலைமையில் நடைபெறும்.

தென்மராட்சிக் கல்விக் கோட்ட உதவிப் பணிப்பாளர் திரு நா. சத்தியநாதன் இவ்விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். [ஒ-117]

## விளையாட்டு நிகழ்வுகள்

"உதயன்" கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் பருத்தித்துறை திக்கமுனையில் உள்ள கழக மைதானத்தில் நடக்கும் கால் இறுதி ஆட்டத்தில் மோதும் அணிகள் வருமாறு:—

★ 3.45 மணி — சென். மேரிஸ் அணி எதிர் யங்ஹீரோ யஸ் 'ஏ' அணி

★ 4.45 மணி — அளவெட்டி இளைஞர் அணி எதிர் நவசக்தி அணி. (இ-3)

## விற்பனை நிலையம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23
நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பாடசாலை உபகரண காகிதாதி விற்பனை நிலையம் இன்று வெள்ளி காலை 9-30 மணிக்கு கொக்குவிலில் திறந்து வைக்கப்படும்.

அதே சமயம் இல இல. 17 கோண்டாவில் கிழக்கு இணையும், இல இல. 21 பரமேஸ்வரா சந்தி இணையும் இன்று வெள்ளி காலை 9 30 மணிக்கு வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டு செயற்பட உள்ளன. (இ)

## போஷாக்கு வாரப் போட்டி

சங்கானை கல்விக் கோட்டமும் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் பாடசாலை மாணவர்களிடையேயான போஷாக்கு வாரப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் நடைபெறும். (இ-152-161)

## தமிழ்தின விழா கலைத் தாரகை வெளியீடு

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் தமிழ்த்தின விழாவும் கலைத்தாரகை வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி கலந்து கொள்வார். (இ)

### ஈழ அகதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பெற்ற இந்த வழக்கு தீர்ப்பு தொலைக் காட்சியில் நேரடியாக காண்பிக்கப்பட்டது

1980 ஆம் ஆண்டு நீதியமைச்சராக இருந்தபோது இந்த குற்றத்தை இழைத்தார் என்று இவர் மீது நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்த விவகாரம் தொடர்பாக 1993ஆம் ஆண்டு இவர் மீது நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட குற்றவியல் பிரேரணையை அடுத்து இவர் நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றப் பட்டிருந்தார்.

தற்போது வழக்கு நடைபெற்று இவருக்கு தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது

### அரசின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
விசாரணைகளையும் பேணும் மொழி சிங்களமாக இருக்கும்.

சிங்கள மொழி மூலம் அல்லது தமிழ்மொழி மூலம் கல்வி கற்பதற்கும், பரீட்சை எழுதுவதற்கும் எவருக்கும் உரிமை உண்டு.

வசதிகள் இருப்பின் எந்தவொரு தேசிய மொழியிலும் கல்வி கற்கவும், பரீட்சை எழுதவும் எவருக்கும் சட்டப்படி உரிமை உண்டு.

உயர் கல்வி நிலையம் ஒன்றில் தேசிய மொழிகளில் மூன்றில் எந்த ஒருமொழியிலாவது கல்வி கற்க உரிமை உண்டு. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாக நின்றவர்க்கோர்
## தயவான விண்ணப்பம்

எங்கள் பிதாமகர்!
**திருமிகு இ. ஜெயராஜ் அவர்களே!**

தமிழ்க் கடல் ஓயலாமோ?
தமிழ்ச் சுவை மாயலாமோ?

தயை கூர்ந்து தங்கள் முடிவை
மாற்றுங்கள்

"சேமமுற வேண்டுமெனில்
தெருவெல்லாம் தமிழ்முழக்கம்
செழிக்கச் செய்வீர்"

தாழ்ந்திறைஞ்சி நிற்கும்:
- ஊரெழுக் கம்பன் கழகத்தார் -

[சி-1547]

## மரண அறிவித்தல்கள்

### சிவராசா ஸ்ரீவெங்கடேசன்

கொட்டடியைச் சேர்ந்த சிவராசா ஸ்ரீவெங்கடேசன் 07-06-1995 அன்று ஜேர்மனியில் அகால மரணமானார். அன்னார் இளைப்பாறிய ஆசிரியர் (யாழ் இந்துக்கல்லூரி) திருநாவுக்கரசு சிவராசா, திருமதி மனோரஞ்சிதம்சிவராசா,(உரும்பிராய்),இளைப்பாறிய யாழ். மத்திய கல்லூரி, ஆசிரியை அவர்களின் ஏகபுத்திரனும், யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. சிவராசா (தகப்பன்)

இந்திரவாசா,
பலாலி வீதி,
NEAR C. M. S. CHURCH
உரும்பிராய்.

[8602)

### சின்னையா சுப்பிரமணியம்

உடுவிலைச் சேர்ந்த சின்னையா சுப்பிரமணியம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி, சரஸ்வதி அம்மா, புஸ்பகாந்தி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, சண்முகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதிச்சடங்கு 22-06-95 வியாழக்கிழமை உடுவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
ச. சற்குணமூர்த்தி
[மருமகன்]

உடுவில்

(37190)

### திருமதி குருஸ் கிறிஸ்தினம்மா

நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும், பழம் றோட், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட குருஸ் கிறிஸ்தினம்மா 22-06-95 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பர்ணாந்து தொம்மாசியின் அன்பு மகளும், காலஞ்சென்ற பேதுரு குருசின் அன்பு மனைவியும், புஸ்பராணி மத்தியாஸ் [தெ. ப. பொ. கூ. ச. ஊர்காவற்றுறை], யுவறேசியா, சிங்கராயர் [பிரான்ஸ்), மனோகரன் [ஜேர்மனி], ஜெயசீலன் [பிரான்ஸ்], ஜேற்றாட், போல் (பிரான்ஸ்), செல்லக்கண்டு [பிரான்ஸ்] ஆகியோரின் அருமைத் தாயாரும், ஜென்றி, ஞானம்மா, வென்சஸ்லாஸ் மெற்றில்டா [கொழும்பு), சிறப்பின், றோஸ் [பிரான்ஸ்], ரவீந்திரன், றஞ்சிதம் (பிரான்ஸ்], பாக்கியராஜா [பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கஸ்பாறு, காலஞ்சென்ற நீக்கிலாஸ் ஞானம்மா, திரேசம்மா, அன்னம்மா, மரியதாஸ் [இளைப்பாறிய தொலைத்தொடர்பு உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்] ஆகியோரின் சகோதரியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். அன்னாரின் நல்லடக்கம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்,

தகவல்:
பி. ஜென்றி
[மருமகன்]

பழம் றோட்,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

[37196]

திருமதி
### சிவமணிதேவி இரத்தினம்
(ஆசிரியை-கொழும்பு)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிவமணிதேவி இரத்தினம், [ஆசிரியை கொழும்பு), 21-06-1995 கொழும்பில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி விநாசித்தம்பியின் கனிஷ்டபுத்திரியும்,திரு அ. இரத்தினத்தின் [இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர்] அன்பு மனைவியும், அபிராமியின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செல்லப்பா சோதிமலர், கலாநிதி கா. சண்முகநாதன் பர்வதவர்த்தினி, காலஞ்சென்ற ஜெகதீசன், குணத்துரை சிவனேசராணி, காலஞ்சென்ற குகதாசன், இரத்தினேஸ்வரன் நிர்மலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கா. சண்முகநாதன்,
சுதுமலை வடக்கு.

50, சென் லாறன்ஸ் வீதி
வெள்ளவத்தை.

[37193]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23-06-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

யாழ். மாவட்ட
## அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு, யாழ். மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளரைச் சந்தித்து கலந்துரையாடுவது தொடர்பான நிகழ்வு நாளை காலை 9-30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும். எமது சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள சகல கழகங்களினதும் தலைவர்கள், செயலாளர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றும்படி அழைக்கப்பட்டுள்ளனர்.

செயலாளர்,
யா. மா. அ. மெ. சங்கம்.

(சி-1546)

உ
யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
## நிறுவியவர் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும் - 1995

காலம்:- 24.06.1995 சனிக்கிழமை காலை 8.30 மணி

இடம்:- யா/ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மருதனார்மடம்

தலைவர்:- திரு. க. நாகராஜா அவர்கள் [அதிபர்]

முதன்மைவிருந்தினர்:- திரு க. கந்தசாமி அவர்கள் [கல்விப்பணிப்பாளர், வலயம் 2 யாழ்ப்பாணம்]

நினைவுப்பேருரை வழங்குநர்-:
திரு. எஸ். தயாபரன் அவர்கள்
(பொறியியலாளர், யாழ் பல்கலைக்கழகம்)

பரிசில் வழங்கல்:-
முதன்மை விருந்தினர் அவர்கள்

சிறப்பு விருந்தினர்கள்:-
திரு வி. மகேந்திரன் அவர்கள்
[பிரதிக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்]
திரு. பா. கபிலன் அவர்கள்
[பொறுப்பாளர், மாணவர் அமைப்பு]

நன்றியுரை-: திரு. V. இராசதுரை
[செயலாளர், பழைய மாணவர் சங்கம்]

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

13-06-95

[சி/205]

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
## "மேலைத்தேய வாத்திய அரங்கேற்றம்"

காலம்: 23-06-1995 வெள்ளி பிற்பகல் 2.30 மணி

விருந்தினர் ஊர்வலம்;
கந்தரோடை வற்றாக்கை அம்பாள் ஆலயத்தில் இருந்து கல்லூரி வளாகம் வந்தடைதல்.

ஆசியுரை; அன்னை சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி

வாழ்த்துரை: திரு. A. கமலநாதன்
[முதல்வர், யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி]
திரு. S. இரத்தினராசா
[பிரதிக் கல்விப்பணிப்பாளர், உடுவில் கோட்டம்]
திரு. பா. கபிலன்
(விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு)

கௌரவிப்பு;
மேலைத்தேய வாத்திய விற்பன்னர்
திரு S.S.P. அமலதாஸ் அவர்களைக் கௌரவித்தல்
(மாவட்ட ஆசிரிய ஆலோசகர்)

நன்றி:
மேலைத்தேய வாத்திய அணிக்கான நிதியுதவி செய்த கல்லூரிச் சமூகத்தினர் அனைவருக்கும் எமது நன்றிகள்.

அதிபர், ஆசிரிய கழகம்,
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி

கந்தரோடை,
சுன்னாகம்.

(8443)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 21 — 03 — 1981

இறைவன் அடியில்: 18 — 06 — 1990

### திரவியம் காண்டீபன் (தீபன்)
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)

ஆண்டு ஐந்து போனாலும்
உன் சிரித்த முகம் கண்களில் ஓடுதடா
காலைக் கதிரவன் போல் காட்சிதனைத் தந்துவிட்டு
கண் இமைக்கும் நேரத்தில் கண்களை
மூடிக்கொண்டாய்
நீ பிரிந்த நாள் முதலாய் எம் நெஞ்சம் குமுறுதடா.

அப்பா, அம்மா

40, பலாலிவீதி,
யாழ்ப்பாணம்.

(8599)

தப்பியோடிய..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
திட்டமிட்டு வருகிறது.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றோர் குறிப்பிட்ட கால எல்லைக்குள் மீண்டும் வந்து சேர்ந்து கொண்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது (இ-6-3)

தனியார்...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அதனைத் தொடர்ந்து இந்த விவகாரம் குறித்து ஆராய அரசாங்க வைத்தியர் சங்கத்தின் கோரிக்கைப்படி வைத்திய கலாநிதி எஸ். ஆனந்தராஜா தலைமையில் சமரசக் குழு ஒன்று அமைக்கப்பட்டதும் — தெரிந்தவையே.

சமரசக் குழு இந்த விவகாரம் குறித்து பலதரப்பட்டவர்களுடனும் பேச்சுக்களை நடத்தி 37 மாணவர்களையும் மருத்துவ பீடத்தில் அனுமதித்துக் கல்வி போதிப்பதற்கான பல ஆலோசனைகளை தெரிவித்து தனது அறிக்கையைத் தயாரித்துள்ளது.

இந்த ஆலோசனைகள் குறித்து பல்கலைக்கழக மூதவை, கவுன்ஸில் ஆகியன ஆராய்ந்த பின்னர்,37 மாணவர்களை மருத்துவபீடத்தில் அனுமதிப்பது சம்பந்தமான இறுதி விபரம் வெளிவரும் எனத் தெரியவந்தது

(அ-3)

மரண அறிவித்தல்

### சீனிவாசகம் சண்முகம்
(முன்னாள் கணக்காளர் சிலோன் பிரிண்டேர்ஸ்]

மூளாயைச் சேர்ந்தவரும் அரசடி வீதி, வண்ணார்பண்ணையில் வசித்தவருமான சீனிவாசகம் சண்முகம் நேற்று காலமானார்.

அன்னார் திருமதி இராஜேஸ்வரி (முன்னாள் பிரதி அதிபர், யாழ். இந்து மகளிர் கல்லூரி] அவர்களின் அன்புக் கணவரும் திருமதி கீதா ஞானேந்திரன் (லண்டன்), டாக்டர் செல்வி ஆனந்தி (கனடா), செல்வி லக்ஷ்மி (போதனாசிரியர், இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மூளாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சீனிவாசகம் (ஆசிரியர்) — சிவபாக்கியலட்சுமி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற எஸ். யூ.சோமசேகரம் [முன்னாள் கல்விப் பணிப்பாளர் — வடமாநிலம்] — வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும் சுவாமிநாதன் [கணக்காளர்], திருமதி பத்மாவதி குமாரசுவாமி, டாக்டர் யோகநாதன் [ஆஸ்திரேலியா] ஆகியோரின் அன்புச் சகோதரரும் நிதர்சன், நிருபா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திரு.தி இராஜேஸ்வரி
சண்முகம்
(மனைவி)

அரசடி வீதி,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி
முன்பாக,
யாழ்ப்பாணம்.

(சி/1551)

## வெளிவந்துவிட்டது!

"நெம்பு" மே - ஜூன் இருமாத இதழ்
வெளிவந்துவிட்டது!

இவ்விதழ்
### "தேவை புதிய கல்வி அமைப்பு"

என்னும் ஆசிரியர் தலையங்கத்தையும், தமிழ் தேசிய இனத்திற்கெதிரான கல்விப்புறக்கணிப்புக்கள், நாம் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கான அடித்தளம், யாழ்ப்பாண ராச்சியம் ஆகிய கட்டுரைகளையும் உள்ளடக்கியுள்ளதுடன் மருத்துவம், வாணியல்,விளையாட்டு,கலை,சிறுகதை,'கவிதை,'சிக்கலிற்கு ஒரு நிமிடம்,'போன்ற பல்வேறு சுவையான அம்சங்களையும் தாங்கி வெளிவந்துவிட்டது.

(37200)

## விசேட பொதுச் சபைக் கூட்டம்

காலம்: 23-06-1995 (வெள்ளிக்கிழமை)
நேரம்: பிற்பகல் 2 மணி
இடம்: 8, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்,

★ அனைத்து பொதுச்சபை உறுப்பினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

செயலாளர்,
வட. பிராந்திய
யாழ். ஆங்கில மருந்து வணிக மன்றம்.

(சி-1708)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

விடத்தற்பளை, மிருசுவிலைச் சேர்ந்த, விடத்தற்பளை கிராம அலுவலராகப் பணிபுரியும்
திரு. கந்தையா நடராசமூர்த்தி
அவர்களின் அன்புத் தாயாரான

### திருமதி சின்னம்மா கந்தையா

அவர்கள் 24-05-1995 ஆம் திகதி சிவபதம் அடைந்தமையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எங்கள் அஞ்சலியைச் செலுத்துவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக
ஊழியர் நலன்புரிசங்கம்,
தென்மராட்சி.

பிரதேச செயலகம்,
சாவகச்சேரி.
21-06-1995.

[சி-1543]

31 ஆம் நாள்
## நிறைவு தின அழைப்பு
(23-06-1995)

### திருமதி சின்னம்மா கந்தையா

தோற்றம்: 19-08-1925
மறைவு: 24-05-1995

என்னை ஆளாக்கி எனக்கொரு வாழ்வு தந்து விண்ணை ஆளப்போன என் அன்னையின் அந்திமக் கிரியைகளில் கலந்து நல் ஆதரவு தந்திட்ட அனைவருக்கும் என் நன்றி.

முப்பத்தொரு நாட்கள் முடிவுற்ற இந்நாளில் என் தாயின் நினைவாக எனதில்லத்தில் இன்று (23-6-95) இடம்பெறும் ஆத்ம சாந்தி கிரியைகளிலும் மதிய போசன விருந்திலும் கலந்திட அன்பர்கள் நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றேன் அன்புடன்.

நன்றி

க. நடராசமூர்த்தி
(கிராம உத்தியோகத்தர்)

விடத்தற்பளை,
மிருசுவில்.

(37197)

## அன்பான தமிழ்ப் பெருமக்களே!

20-06-1995 'உதயன்' நாளிதழில் கம்பன் கழக அமைப்பாளர் திரு இ ஜெயராஜ் அவர்கள் வெளியிட்ட கருத்தை ஆராயும் நோக்கில் கலந்துரையாடுவதற்கு நல்லையாதீனத்தில் 24-06-1995 சனிக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு கூடுவதாகவுள்ளோம். இதிற் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

கருத்துரை வழங்குவோர்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
மாவையாதீனம் சிவஸ்ரீ சண்முகநாதக்குருக்கள்
சிவஸ்ரீ. மகாதேவக்குருக்கள்
அருட் கவி. சீ. விநாசித்தம்பி
இலக்கணவித்தகர் இ. நமசிவாயதேசிகர்
திரு அ. பஞ்சலிங்கம் (அதிபர், யாழ். இந்துக் கல்லூரி)
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை [கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக் கழகம்)

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் ('நந்தி')
வைத்தியகலாநிதி செ, சு நச்சினார்க்கினியன்
திரு. க. குணராஜா [பிரதேச செயலர், யாழ்ப்பாணம்)
வித்துவான் க, சொக்கலிங்கம் M. A.
திரு. கே. கே. சோமசுந்தரம் B. A.
திரு. வே. பொ. பாலசிங்கம் [ஆணையாளர், யாழ். மாநகர சபை)
திரு. நாக. சண்முகநாதபிள்ளை (அதிபர், மத்திய கல்லூரி)
'சிவநெறிப்புரவலர்' வித்துவான் சி. செ. சோமசுந்தரம்
திரு. கோ. சி. வேலாயுதம் (இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
வைத்தியகலாநிதி சு. பவானி (சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக் கழகம்)

திரு. க. சிவராமலிங்கம் B. A,
கலாநிதி காரை, செ. சுந்தரம்பிள்ளை
[அழைப்பாளர்கள்]

(சி/1550]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org